بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 22.05.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 22 May 2015 (Tamil)**

**நமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மார்க்கத்தின் பணியை நானே செய்ய வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உறுதிமொழிக்குப் பிறகு அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டு விடும். ஒவ்வொரு கஷ்டமும் அவருக்கு எளிதாகிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வறுமையும் அவருக்கு செழிப்பாகிக் கொண்டிருக்கும். சந்தேகமின்றி அவர்களுக்கு சில துன்பங்கள், சோதனைகள், வேதனைகளினாலும் துக்கம் அனுபவிக்க வேண்டியது வரும். ஆனால் அவர்கள் அதில் முற்றிலும் சொகுசை உணர்வார்கள்.**

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா அல்-ஹுஜுராத்தின் 13 ஆவது வசனத்தை ஓதினார்கள். அதன் பொருள்:**

''நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சில யூகங்கள் பாவங்களாக இருக்கின்றன.'' ***(திருக்குர்ஆன் 49:13)***

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மனிதன் தவறான எண்ணங்கள் மற்றும் சந்தேகங்கள் கொள்ள ஆரம்பிக்கும்போது குழப்பம் ஏற்பட ஆரம்பிக்கிறது. நல்லெண்ணம் கொன்டால் பிறகு ஏதாவது கொடுப்பதற்கு நல்வாய்ப்பு கிடைத்து விடுகிறது. முதல் அடியிலேயே தவறிழைத்தால் பிறகு குறிக்கோளை அடைவது கடினமாகும். அவர்கள் கூறினார்கள்: தவறான எண்ணம் மிகவும் தீயதாகும். அது மனிதனை பல நன்மைகளிலிருந்து விலக்கி வைத்து விடுகின்றது. பிறகு இது வளர்ந்து வளர்ந்து எதுவரை சென்று விடுகிறதென்றால் மனிதன் இறைவன் மீது தவறான எண்ணம் கொள்ள ஆரம்பித்து விடுகிறான்.

பிறகு இன்னோரிடத்தில் அவர்கள் கூறினார்கள்: ''அகத்தை நாம் ஆட்சி கொள்ள முடியாது.'' அதாவது ஒருவருடைய உள்ளத்திலுள்ளதை நாம் அறிய முடியாது. ''அதை தேடுவதும் பாவமாகும். மனிதன் ஒருவரை தீயவராகக் கருதுகிறான்; பிறகு அவனே அவரை விட மிக மோசமானவனாக இருக்கிறான். சீக்கிரம் தவறான எண்ணம் கொள்வது நல்லதன்று. அடியார்களைப் பற்றி அறிவது மிகவும் நுட்பமான விஷயமாகும்.'' அதாவது நாம் மக்களின் உள்ளங்களை அறியக் கூடியவர்களாக இருக்கிறோம் என நினைப்பது மிகவும் நுண்ணிய விஷயமாகும். ஏன் நுண்ணிய விஷயம் என்பதற்கான காரணத்தையும் கூறுகிறார்கள். ''ஏனெனில் இது பல சமுதாயங்களை நாசமாக்கி விட்டது. அவர்கள் நபிமார்கள் மற்றும் அஹ்லே பைத் மீது தவறான எண்ணம் கொண்டனர். பிறகு இறைவன் மீதும் தவறான எண்ணம் ஏற்படத் துவங்கி விடுகிறது.

இப்படிப்பட்ட தவறான எண்ணம் கொண்டவர்களைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கள் நபிமார்கள் மீதும் அஹ்லே பைத்தின் மீது அதிகமாக தவறான எண்ணம் கொண்டனர் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டது போன்று, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுக்கு

தமது காலத்தில் இதை அதிகமாக எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் என்னை கலீஃபாவாக்கினான். அவனே தனது உதவியையும் ஆதரவையும் எப்போதும் என்னுடன் வைத்தான். இறைவன் எப்போதும் எனது ஆதரவுக்காக வானத்திலிருந்து வானவர்களை இறக்கினான் என்பதை ஒரு குருடன் அல்லது பிறவிக் குருடனைத் தவிர எவரும் மறுக்க முடியாது. எனவே இப்போதும் நீங்கள் ஆட்சேபணை செய்து பாருங்கள். அந்த ஆட்சேபணைகளுக்கு என்ன விளைவு ஏற்படுகிறது என்பது உங்களுக்குத் தெரிந்து விடும். இந்த மாதிரியான ஆட்சேபணைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீதும் செய்யப்பட்டது. ஒருமுறை ஒருவர் இதே மாதிரியான ஆட்சேபணையை செய்தார். சந்தா கொடுப்பது தொடர்பாக அந்த ஆட்சேபணை இருந்தது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரிடம், இனி நீங்கள் ஒரு பைசா கூட அனுப்புவது ஹராம் ஆகும். இறைவனின் இந்த இயக்கத்திற்கு என்ன நஷ்டத்தை ஏற்படுத்தி விடமுடியும் என பிறகு பாருங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நானும் இந்த மக்களுக்கு அதே முறையில் கூறுகிறேன்: தவறான முறையில் செலவு செய்யப்படுகிறது; காலத்தின் கலீஃபா அதை தவறாக செலவு செய்கிறார் என ஆட்சேபணை செய்யும் நீங்கள், இயக்கத்தின் உதவிக்காக ஒரு பைசா கூட அனுப்புவது உங்களுக்கு ஹராமாகும். கடுமையான வார்த்தையை பயன்படுத்துவது எனது பழக்கமல்ல. ஆனால் நான் கூறுகிறேன்: உங்களிடம் கொஞ்சமாவது நேர்மை எஞ்சியிருக்கிறதென்றால், நீங்கள் இந்த இயக்கத்திற்காக ஒரு பைசா கூட கொடுக்காதீர்கள். இயக்கத்தின் வேலை நடக்கிறதா இல்லையா என பிறகு பாருங்கள். அல்லாஹ் மறைவிலிருந்து எனது உதவிக்கான வழிவகைகளை செய்வான். எனக்கு உதவி செய்யுமாறு தூய மனம் கொண்டவர்களுக்கு இல்ஹாம் மூலமாக அறிவிப்பான். அவர்கள் இந்த இயக்கத்திற்காக தமது செல்வங்களை தியாகம் செய்வதை தமது பெருமைக்குரியதாகக் கருதுவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருமுறை தோட்டத்திற்கு சென்றார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள்: **இங்கு எனக்கு வெள்ளியினாலான கபர்கள் காட்டப்பட்டன. அப்போது ஒரு வானவர் என்னிடம், இது உமது மற்றும் உமது குடும்பத்தாருடைய கபருகளாகும். எனவேதான் அந்த பகுதி உங்கள் குடும்பத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார்.** ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: கனவு இவ்வாறு அச்சிடப்படவில்லை என்றாலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறே கூறினார்கள் என எனக்கு நினைவிருக்கிறது. எனவே இறைவன் எங்களின் கபருகளை வெள்ளியினாலானவை எனக் காட்டி விட்டான். (நீங்கள் எங்களைப் பற்றி) இவர்கள் தமது வாழ்வில் மற்றவர்களின் பணத்தை சாப்பிடுகின்றனர் எனக் கூறுகின்றீர்கள். நாம் இவர்களின் மூலமாக மக்களுக்கு பயன் பெறச் செய்வோம் என இறைவன் கூறுகிறான். எனவே அல்லாஹ் எங்களின் மண்ணையும் வெள்ளியாக்குகின்றான். நீங்கள் உங்களின் ஆட்சேபணைகளின் மூலமாக உங்கள் வெள்ளியையும் மண்ணாக்கிக் கொண்டிருக்கின்றீர்கள்.

நான் கூறியது போன்று அப்படிப்பட்டவர்கள் எல்லா காலத்திலும் இருக்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் அவர்களின் மீது இந்த ஆட்சேபணை எழுந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நம்மை விட்டுப் பிரிந்தவர்களிடம் தமது சகோதரர்கள் மீது தவறான எண்ணம் கொள்ளும் பழக்கம் இருந்தது. அதன்

விளைவாக அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஆட்சேபணை செய்து விட்டனர். அதாவது அவர்கள் ஜமாஅத்தின் பணத்தை சொந்த செலவுக்காகப் பயன்படுத்துகின்றார்கள் என ஆட்சேபித்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடைசி காலத்தில் இந்த விஷயம் தெரிய வந்தது. அப்போது அவர்கள் என்னிடம் (அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம்) கூறினார்கள்: விருந்தினர் இல்லத்திற்காக வரும் பணத்தை நான் எனது சொந்த செலவுக்காக பயன்படுத்தி விடுகிறேன் என இந்த மக்கள் நினைக்கின்றனர். ஆனால் எவர்கள் எனக்கு அன்பளிப்பாக கொண்டு வருகிறார்களோ அதாவது நீங்கள் சொந்தமாக செலவு செய்யுங்கள் என்பதற்காக கொண்டு வருகிறார்களோ அவற்றிலிருந்தும் நான் விருந்தினர் இல்லத்திற்காக கொடுத்து விடுகிறேன் என்பது (ஆட்சேபனை செய்யும்) அவர்களுக்குத் தெரியாது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இப்போது ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கின்ற செழிப்பும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்கள் அல்லாஹ்வின் வாக்குறுதிகளின் விளைவாகும். இது எவருடைய சொந்த முயற்சியுமல்ல. இன்று அல்லாஹ்வின் அருளினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர் இல்லமும் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இயங்கி வருகிறது.

உலகில் ஆரம்பித்து விட்ட ஆன்மீக வீழ்ச்சியை சீரமைப்பதற்காக, மக்களிடம் ஏற்பட்டுவிட்ட வீழ்ச்சியை ஆன்மீகமான முறையில் சீர்திருத்த வேண்டும் என்பதற்காக அல்லாஹ் தனது நபியை உலகிற்கு அனுப்புகிறான். நபிமார்களை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்போது அவர்களை ஏற்றுக் கொள்பவர்களின் ஆன்மீக முன்னேற்றங்களுடன் பௌதீக முன்னேற்றங்களும் கிடைக்கின்றன. ஆனால் பௌதீகமான, உலக முன்னேற்றங்களின் தகுதி நபியின் வாழ்க்கைக்குப் பிறகு அதிகமாகி விடுகின்றன. ஆயினும் ஆன்மீக முன்னேற்றத்தைப் பொருத்தவரை தனக்கே உரிய தனித்தன்மையைக் கொண்ட நபியின் காலத்தை பிறகு வரக் கூடிய காலம் கொண்டிருக்க முடியாது. நபியின் மரணத்திற்கு பிறகு உடனேயே ஆன்மீகமான முறையில் இரவுக் காலம் ஆரம்பமாகி விடுகிறது. ஆனால் பௌதீகமான முறையில் நபியின் மரணம் விடியற்காலை உதயத்தைக் குறிப்பிடுகிறது. உடனேயே சூரிய உதயம் அதாவது வெளிப்படையான வெற்றிகளுக்கான காட்சிகள் தென்படத் தொடங்கி விடுகின்றன. அவ்வாறே ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் நடந்தது. அவ்வாறே ஈஸா, மூஸா காலத்தில் நடந்தது. அவ்வாறே இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் நடைபெற்றது.

ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எங்கள் தாயாரிடம், இப்போது பணத்திற்கான எந்த வழியும் தென்படவில்லை. மிக அதிகமான செலவுகள் ஆரம்பமாகி விட்டன. யாரிடமிருந்தாவது கடன் வாங்கினால் நல்லது என நான் நினைக்கிறேன் எனக் கூறினார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர்கள் ளுஹர் தொழுகைக்காக சென்று விட்டார்கள். திரும்பி வரும்போது புன்சிரித்தவாறு தாயாரிடம், இறைவனுடைய அடையாளங்களை தொடர்ந்து பார்த்து வந்தாலும் மனிதன் சில நேரத்தில் தவறான எண்ணம் கொண்டு விடுகிறான். விருந்தினர் இல்லத்திற்கு பணமில்லையே; இனி எங்கிருந்தாவது கடன் வாங்க வேண்டியது வரும் என நான் நினைத்தேன். ஆனால் நான் தொழுகைக்காகச் சென்றபோது அழுக்கான ஆடை அணிந்திருந்த ஒருவர் வந்து எனது கையில் ஒரு பொட்டலத்தைத் தந்தார். நான் அவருடைய நிலையைப் பார்த்து அதில் சில பைசாக்கள் இருக்கும் என நினைத்தேன். பொட்டலமும் கனமாக இருந்தது. சில பைசாக்களின் காரணமாக கனமாக இருக்கிறது என நினைத்தேன். ஆனால் நான் அதை வீட்டிற்கு வந்து திறந்து

பார்த்தபோது அதிலிருந்து பல நூறு ரூபாய்கள் வெளிவந்தன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்களுக்கு இருந்த அன்பைப் பற்றி படம்பிடித்துக் காட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்தவர்களுக்கு அவர்கள் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்ததோ அதைப் பற்றி அதற்குப் பின்னர் வந்தவர்களால் கணிக்க முடியாது. அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இருந்தாலும் குறைந்த வயதைக் கொண்டவர்களால் கணித்துப் பார்க்க முடியாது. ஆனால் எனக்கு அல்லாஹ் எப்படிப்பட்ட உள்ளத்தை வழங்கி இருந்தான் என்றால், நான் சிறுவனாக இருக்கும்போதே இதன் பக்கம் கவனம் செலுத்தினேன். எவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பைப் பற்றி அனுமானித்திருந்தார்களோ, அவர்களுடன் இருந்தார்களோ பல ஆண்டுகளாக நான் அவர்களைப் பற்றிப் பார்த்திருக்கிறேன்: அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விட்டுப் பிரிந்திருந்ததன் காரணமாக தமது வாழ்வில் எந்தவோர் இன்பமும் **உணரவில்லை. உலகில் எந்தவொரு பொலிவும் தென்படவில்லை. ஹஸ்ரத் முதல் கலீஃஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பலமுறை தனியாக இருக்கும்போது, பக்கத்தில் யாரும் இல்லாதபோது என்னிடம், மியான்! ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மரணமடைந்ததிலிருந்து எனக்கு எனது உடல் காலியாகத் தெரிகிறது. உலகம் காலியாக தென்படுகிறது எனக் கூறினார்கள்.**

ஒருமுறை ஜமாஅத் பணியாளர்களை நோக்கி, குறிப்பாக பொருள்களின் விலை அதிகமாக உள்ள நாடுகளில், அதிக ஏழ்மையாக இருக்கும் நாடுகளில் வாழும் ஜமாஅத் பணியாளர்களுக்கு அறிவுரை கூறியவாறு இவ்வாறு குறிப்பிட்டார்கள்: எவருக்கும் அஞ்சுமன் மீது பார்வை இருக்க வேண்டாம்; எதை வேண்டினாலும் அல்லாஹ்விடம் வேண்டுங்கள். இதை சான்றாகக் கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சிறிய உதாரணத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அதிகமாக குளிரை உணர்ந்தார்கள். எனவே அவர்கள் கஸ்தூரியை சாப்பிட்டு வந்தார்கள். இது நாட்டு மருத்துவர்களின் மருந்தாகும். கஸ்தூரி சாப்பிடுவதால் குளிர் நீங்கி விடுகிறது. எனவே பாட்டில் நிரம்ப கஸ்தூரியை சட்டைப் பையில் வைத்து வந்தார்கள். தேவைப்படும்போது பயன்படுத்தி வந்தார்கள். மேலும் ஒரு சின்ன பாட்டில் சட்டைப் பைக்குள் வந்து விடுகிறது. இரண்டு இரண்டு ஆண்டுகள் வரை பயன்படுகிறது எனக் கூறினார்கள். ஆனால் கஸ்தூரி கொஞ்சம்தான் எஞ்சியிருக்கிறது என்ற எண்ணம் தோன்றும்போது பாட்டிலைப் பார்க்கும்போது அது முடிந்து விடுகிறது. பார்க்காத வரை சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறோம். அதில் அருள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் தன் அடியார்களுக்கு மறைமுகமான முறையில் உணவை அனுப்புகிறான். மேலும் அவன் உணவை அனுப்பும் வழிமுறையும் அற்புதமானதாகும். எனவே எவனுடைய கருவூலம் காலியாவதில்லையோ அவனிடம் நீங்கள் வேண்டுங்கள். உங்களுக்காக அதிகமாக்கித் தருவதற்கு பணமே இல்லாத அஞ்சுமனிடம் ஏன் வேண்டுகிறீர்கள்? எனவே நீங்கள் இறைவனை வணங்குபவர்களாகுங்கள்.இறைவன் மறைவிலிருந்து உங்களுக்கு உணவை அனுப்பி விடுவான். அவனிடம் வேண்டுங்கள்.

எனவே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவன் மீது மேலும் அதிகமாக நம்பிக்கை வைக்க வேண்டும். இங்குமங்கும் பார்ப்பதற்கு பதிலாக அவன் பக்கம் குனிய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு காதியானின் மீது இருந்த அன்பு பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எந்த இடங்களுடன் இறைவனுடைய தொடர்பு இருக்கிறதோ அவை எப்போதும் அருளுக்குரியதாக ஆக்கப்பட்டு விடுகின்றன. காதியானும் அப்படிப்பட்ட ஓர் இடம்தான். அங்கு இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தோன்றினார். அவர் அங்கேயே தனது முழு வாழ்நாலையும் கழித்தார். மேலும் இந்த இடத்தை அவர் நேசித்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கடைசி காலத்தில் லாஹூர் சென்றிருந்தபோது அங்கேயே அவர்கள் மரணமும் அடைந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம், மஹ்மூது! இந்த வெயில் எவ்வளவு கடுமையாக இருக்கிறது? என்றார்கள். ஒவ்வொரு நாளும் பார்ப்பதைப் போன்றே அன்றும் வெயில் இருந்தது. எனவே நான் கூறினேன். இல்லை; எப்போதும் போலத்தான் வெயில் இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இல்லை. இங்குள்ள வெயில் அதிக மஞ்சள் நிறமாகவும், மங்கலாகவும் இருக்கிறது. காதியான் வெயில் தெளிவாகவும், நன்றாகவும் இருக்கிறது. அவர்கள் காதியானிலேயே அடக்கம் செய்யப்படவிருந்தார்கள். எனவே அவர்களுக்கு காதியானுடன் இருக்கும் அன்பும் நேசமும் வெளிப்படும் அத்தகைய ஒரு விஷயத்தைக் கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது மரணத்திற்கு கொஞ்ச காலத்திற்கு முன்பு எனக்கு ஒரு குதிரை வாங்கிக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்ப்ட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது அதன் பாதிப்பு எங்களின் செலவுகளின்மீதும் கண்டிப்பாக ஏற்பட்டது. எனவே அந்தக் குதிரையை விற்று விட வேண்டும் என நான் எண்ணினேன். ஒருவர் எனக்கு, இந்த குதிரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பளிப்பு ஆகும். எனவே நீங்கள் ஒருபோதும் விற்காதீர்கள் என செய்தி அனுப்பினார். என்னிடம் இது கூறப்பட்டதும் உடனே எனது வாயிலிருந்து வந்த வார்த்தை இதுவாக இருந்தது: சந்தேகமின்றி, இந்தக் குதிரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பளிப்புதான். ஆனால் அதை விட பெரிய அன்பளிப்பு உம்முல் முஃமினீன் அவர்கள் ஆவார்கள். நான் குதிரைக்காக உம்முல் முஃமினீன் அவர்களுக்கு துன்பம் கொடுக்க விரும்பவில்லை. எனவே நான் அந்தக் குதிரையை விற்று விட்டேன்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணம் மற்றும் தனது நிலைமை பற்றி குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது அவர்கள் திடீரென்று மரணமடைந்து விட்டார்கள் எனக் கருதப்பட்டது. ஆனால் எனக்கு இது பற்றி சில விஷயங்கள் தெரிய வந்தன. அதிலிருந்து ஒரு பெரிய புரட்சி வரவிருக்கிறது எனத் தெரிய வந்தது. உதாரணமாக, நான் கனவில் கண்டேன். நான் பெஹெஷ்தி மக்பராவிலிருந்து கப்பலில் வந்து கொண்டிருக்கிறேன். வழியில் தண்ணீர் எந்த அளவுக்கு வேகமாக சுழன்று கொண்டிருந்ததென்றால், அந்த நீர் சுழற்சியால் கப்பல் அபாயத்தில் வீழ்ந்து விட்டதாகத் தெரிந்தது. அதனால் கப்பலில் அமர்ந்திருக்கின்ற அனைவரும் பயந்தனர். அப்போது தண்ணீரிலிருந்து ஒரு கை வெளியே வந்தது. அதில் சில எழுத்துகள் எழுதப்பட்டிருந்தன. அதாவது இங்கு ஒரு பீர் சாஹிபின் கபர் இருக்கிறது. அவரிடம் விண்ணப்பம் செய்யுங்கள். அப்போது கப்பல் பாதுகாப்பாக சென்று விடும். நான் கூறினேன். இது ஷிர்க் ஆகும். நமது உயிர் போனாலும் பரவாயில்லை. ஆனால் நாம் இப்படிச் செய்ய மாட்டோம். இதற்குள் அபாயம் மேலும் அதிமானது. உடன்

இருப்பவர்களின் சிலர், ‘அப்படிச் செய்வதில் என்ன தவறு இருக்கிறது?’ எனக் கூறினர். மேலும் எனக்குத் தெரியாமலேயே பீர் சாஹிபுக்கு கடிதம் எழுதி தண்ணீருக்குள் போட்டு விட்டனர். இவையெல்லாம் கனவில் பார்த்தவையாகும். எனக்குத் தெரிய வந்தபோது நான் உடனே தண்ணீரில் குதித்து அந்தக் கடிதத்தை வெளியே எடுத்து விட்டேன். நான் அவ்வாறு செய்ததுமே அந்தக் கப்பல் செல்ல ஆரம்பித்தது. எந்த அபாயமும் இல்லை.

ஹஸ்ரத் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது இறைவன் எனது உள்ளத்தை மிகவும் உறுதியாக்கி விட்டான். இப்போது நம் மீது மிகப் பெரிய பொறுப்பு விழுந்திருக்கிறது என்பதன் பக்கம் எனது சிந்தனை உடனே திரும்பியது. அந்த நேரத்திலேயே நான் உறுதிமொழி எடுத்தேன்: இறைவா! இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சடலத்திற்கு முன்னால் நின்று உறுதிமொழி கூறுகிறேன். இந்தப் பணியைச் செய்வதற்காக உலகில் ஒரு மனிதர் கூட இல்லாவிட்டாலும் நான் செய்து கொண்டிருப்பேன். அந்த நேரத்தில் என்னிடம் வந்த ஆற்றலைப் பற்றி நான் வார்த்தைகளில் கூற முடியாது. எனது அந்த உறுதிமொழிதான் இன்று வரை என்னை உறுதியுடன் எனது எண்ணத்தில் நிலைபெறச்செய்திருக்கிறது. எனக்கு எதிராக எதிர்ப்புகளின் நூற்றுக்கணக்கான சூறாவளிகள் தோன்றின. ஆனால் இந்த மலைக்குன்றுகளின் மீது மோதி தனது தலைகளையே உடைத்துக் கொண்டன.

எனவே நமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மார்க்க வேலையை நான்தான் செய்ய வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உறுதிமொழிக்குப் பிறகு அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டு விடும். மேலும் ஒவ்வொரு கஷ்டமும் அவர்களுக்கு எளிதாகி விடும். ஒவ்வொரு வறுமையும் அவருக்கு செழிப்பாகிக் கொண்டிருக்கும். சந்தேகமின்றி, அவர்களுக்கு சில துன்பங்கள், சோதனைகள், வேதனைகளால் துக்கங்கள் அநுபவிக்க வேண்டியது வரும். ஆனால் அவர்கள் அதில் முற்றிலும் சொகுசை உணர்வார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை நோக்கிக் கூறுகிறான்: மார்க்கத்தை முழுமைப்படுத்துவதற்காக நான் உம்மையே விளித்துக் கூறியிருக்கிறேன். உமது தோழர்கள் இதில் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் உம்மிடமிருந்து நான் எந்நிலையிலும் வேலை வாங்குவேன். இதன் காரணமாகவே அவர்கள் இரவு பகலாக இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இறைவனின் மார்க்கத்தை உலகில் நிலைநாட்டுவதற்காகவே அவர்களின் ஒவ்வொரு அசைவும் அசையாமையும் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும் அர்ப்பணமாகியிருந்தன. இது என்னுடைய வேலைதான்; வேறு யாருடைஅய வேலையுமல்ல என அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இந்த நடைமுறையைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும்.

300 கோடி பேருக்கு ஏக இறைவனைப் பற்றிய தூதை எடுத்து வைக்க வேண்டும். அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மடியின் கீழ் கொண்டு வர வேண்டும். அது ஜமாஅத்தின் கடமையாகும். இது நமக்கு முன்னால் இருக்கும் மிகப் பெரும் பொறுப்பாகும். நமது பலவீனமான தோள்களின் மீது சுமத்தப்பட்டுள்ள மிகப் பெரிய சுமையாகும். இவ்வளவு முக்கியமான பணியில் அல்லாஹ்வின் அற்புதமான ஆதரவுகள் மற்றும் உதவி இல்லாமல் நமது வெற்றிக்கு எந்த வழியும் இருக்க முடியாது. அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad***